# வேளாண்மை - உழவர் நலத்துறை

## வேளாண்மை இயந்திரமயமாக்கும்
## துணை இயக்கத் திட்டம்
## (Sub Mission on Agricultural Mechanization)-2026-27

### வேளாண்மைப் பொறியியல் துறை

# வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்க மானிய உதவி பெறுவது எப்படி?







## உழவர் செயலி மூலம்


- விவசாயிகள் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை, மானியத்தில் பெறுவதற்கு முதலில் தங்கள் கைபேசியிலுள்ள கூகுள் பிளேஸ்டோரிலிருந்து "உழவர் செயலி (Uzhavar App)"-யை பதிவிறக்கம் செய்ய வேண்டும்.

- பின்னர், "ஒரு முறை பதிவு (One Time Registration)" செய்வதற்காக அடிப்படை விவரங்களை செயலியில் பதிவு செய்ய வேண்டும்.

- வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளுக்கான இலக்கு கிராமம் வாரியாக அரசின் இணையதளமான https://mts.aed.tn.gov.in வாயிலாக பதிவேற்றம் செய்யப்படும்.

- இந்த இணையதளம் உழவர் செயலியுடன் தொடர்புடையது.

# வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்க மானிய உதவி பெறுவது எப்படி?





- ❖ **விவசாயிகள் வேளாண் இயந்திரங்களைத் தேர்வு செய்ய, "உழவர் செயலியில் – வேளாண் இயந்திரங்கள் வாடகைக்கு" என்ற தொகுதியில் "வேளாண்மைப் பொறியியல் மானியத் திட்டங்கள்" எனும் தொகுதியில் தங்களது ஆதார் எண்ணை உள்ளீடு செய்ய வேண்டும்.**


- ❖ விவசாயிகள் தங்களுக்குத் தேவையான வேளாண் இயந்திரங்களை தேர்வு செய்ய, **"உழவர் செயலியில் வேளாண்மை இயந்திரங்கள் வாடகைக்கு"** என்ற தொகுதியில் **"வேளாண்மை பொறியியல் மானியத்திட்டங்கள்"** என்ற பிரிவைத் தேர்வு செய்து, தங்களது ஆதார் எண்ணை உள்ளீடு செய்ய வேண்டும். **தமிழ்நாட்டின் ஒருங்கிணைந்த விவசாயிகள் தரவு தளத்தில் (Agri stack- Tamil Nadu Farmer Registry ) விவசாயியின் பதிவு விவரங்கள் இருந்தால், அத்தரவுத்தளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள தொலைபேசி எண்ணிற்கு 4 இலக்க குறியீட்டு எண் (OTP) அனுப்பப்படும்.** அதனை உள்ளீடு செய்தவுடன் விவசாயியின் பெயர், மாவட்டம், வட்டம், கிராமம், சர்வே எண், உட்பிரிவு எண், நிலப்பரப்பு உள்ளிட்ட நிலம் தொடர்பான தகவல்கள் தானாகவே பெறப்படும்.

- ❖ **வேளாண்மைப் பொறியியல் துறையால் ஒப்புதல் மற்றும் அங்கீகாரம் வழங்கப்பட்ட வேளாண் இயந்திரங்களையும் கருவிகளையும் அதனை உற்பத்தி செய்கின்ற உற்பத்தியாளர்களையும் விவசாயிகள் தங்களது சுயவிருப்பத்தின் பேரில் தேர்வு செய்து கொள்ளலாம்.**


# வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்க மானிய உதவி பெறுவது எப்படி?




# வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்க மானிய உதவி பெறுவது எப்படி?







- **மாதத்தில் 1 முதல் 7 ஆம் தேதி வரை : இலக்கு நிர்ணயிக்கப்பட்ட கிராமங்களில் உள்ள விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்.**
- **மாதத்தின் 8 ஆம் தேதி: விண்ணப்பங்கள் கணினிமயமாக்கப்பட்ட "குலுக்கல் தேர்வு (Lottery System)" மூலம் தேர்வு செய்யப்படும்.**
- **தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் ஆவணங்கள் உதவிப் பொறியாளர் (வே.பொ.) / இளநிலைப் பொறியாளர் (வே.பொ.) ஆகியோரால் சரிபார்க்கப்படும்.**
- **ஆவணங்கள் சரியாக இருந்தால், விவசாயிகள் விண்ணப்பங்கள் ஏற்று கொள்ளப்படும்.**
- **ஆவணங்கள் தவறாக இருந்தால் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட விவசாயிகள் மீண்டும் ஒருமுறை விண்ணப்பிக்கலாம்.**
- **இலக்கு சாதனை அடையாத நிலையில், அதே மாதத்தில் 15 முதல் 21 ஆம் தேதி வரை மீண்டும் விண்ணப்பிக்கலாம். 22 ஆம் தேதி மீண்டும் குலுக்கல் முறையில் கணினி மூலமாகவே தேர்வு நடைபெறும்.**




- ❖ இவ்வாறாக ஒவ்வொரு மாதமும் 1 ஆம் தேதி முதல் 7 ஆம் தேதி வரையும் மற்றும் 15 ஆம் தேதி முதல் 21 ஆம் தேதி வரையும் விவசாயிகள் வேளாண் இயந்திரத்திற்கு அல்லது கருவிக்கு ஒதுக்கப்பட்ட இலக்கிற்கு விண்ணப்பிக்கலாம். முந்தைய குலுக்கலில் தேர்வு செய்யப்படாத விண்ணப்பங்களும், புதிய விண்ணப்பங்களுடன் சேர்த்து மீண்டும் பரிசீலிக்கப்படும்.
- ❖ ஆவணங்கள் சரிபார்ப்புக்குப் பிறகு, தகுதியான விவசாயிகள் 5 நாட்களுக்குள் தங்களுக்குத் தேவைப்படும் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளுக்குண்டான, ஒப்புதல் வழங்கப்பட்ட முகவரை (Dealer) தங்களது சுயவிருப்பத்தின் அடிப்படையில் இணையதளத்தில் தேர்வு செய்து கொள்ளலாம்.




❖ இவ்வாறாக 5 நாட்களுக்குள் உரிய முகவரை தேர்வு செய்யாத பட்சத்தில் அவரின் விண்ணப்பம் தானாகவே ரத்தாகி விடும். விவசாயி உரிய முகவரை தேர்வு செய்யும் பட்சத்தில் அவருக்கு 6 இலக்க இரகசிய குறியீட்டு எண் (PIN) வழங்கப்படும்.

❖ விவசாயி, 6 இலக்க இரகசிய குறியீட்டு (PIN) எண்ணை தேர்வு செய்த முகவரிடம் பகிர வேண்டும்.



## 10 விண்ணப்ப நிலை & வழங்கல் ஆணை

- தொகை செலுத்தாவிட்டால் தேர்வு ரத்து செய்யப்படும்.
- அடுத்த குலுக்கலில் மீண்டும் பரிசீலனை செய்யப்படும்.
- விண்ணப்பம் ரத்து செய்ய OTP அவசியம்.
- முகவர்/ உற்பத்தியாளர் பணம் பெற்ற விவரங்களை பதிவேற்றம் செய்ய வேண்டும்.
- பின்னர் வழங்கல் ஆணை (Supply Order) வழங்கப்படும்.




## 11 விவசாயிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இயந்திர விவரங்கள் பதிவேற்றம் (5 நாட்களுக்குள்)

(முகவர் / உற்பத்தியாளர் பதிவேற்ற வேண்டியவை )

- Engine Number (இன்ஜின் எண்)
- Chassis Number (சேசிஸ் எண்)
- Machine Serial Number (கருவியின் வரிசை எண்)
- Model Details (மாடல் விவரம்)
- Invoice (விலைப்பட்டியல்)
- Farmer, Dealer & Machine Photo (விவசாயி, முகவர் மற்றும் இயந்திரப் புகைப்படம்)



## 12 உற்பத்தியாளர் நிறுவனத்தால் உறுதிப்படுத்துதல் (3 நாட்களுக்குள்)

- முகவர் பதிவு செய்த விவரங்கள்
- உற்பத்தியாளர் நிறுவனம் மூலம்
- 3 நாட்களுக்குள் சரிபார்த்து உறுதிப்படுத்தப்படும்.




## 13 ஆய்வு

உதவிப் பொறியாளர் (வே.பொ.) /
இளநிலைப் பொறியாளர் (வே.பொ.) /
உதவி செயற்பொறியாளர் (வே.பொ.)
முகவரின்/உற்பத்தியாளரின் இருப்பிடத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட இயந்திரத்தை நேரில் சென்று ஆய்வு செய்வார்கள்.



# 14 ஆய்வு பதிவு & உறுதிமொழி

- ஆய்வு புகைப்படம் 7 நாட்களுக்குள் பதிவு செய்யப்படும்.
- ரூ.200 நீதித்ததுறை சாரா முத்திரைத்தாளில் விவசாயிகளிடமிருந்து உறுதிமொழி பெறுதல்.
- 4 ஆண்டுகள் இயந்திரத்தை விற்கமாட்டேன் என்ற உறுதிமொழி அவசியம்.
- தேவையெனில் பிற விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்குவேன்.
- விவசாயியின் பங்களிப்புத் தொகையைக் கழித்துவரும் மீதமுள்ள தொகையை, வேளாண்மைப் பொறியியல் துறையிடமிருந்து மானியத் தொகையாக பெறப்பட்டவுடன், முகவர்/ உற்பத்தியாளருக்கு 2 நாட்களுக்குள் உடனடியாக வழங்குவேன்.




ஆய்வு பதிவு புகைப்படம்

உறுதிமொழி (ரூ.200 நீதித்துறை சாரா முத்திரைத்தாள்)

கையொப்பம் பெறுதல்

# 15 மானியத் தொகை வழங்குதல்

- ஆய்வு முடிந்த 10 நாட்களுக்குள்
- ECS மூலம்
- மானியம் விவசாயியின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்.
- வங்கி வரவு உறுதிப்படுத்தப்படும்.



# 16 தொகை செலுத்துதல் (2 நாட்களுக்குள்)



**வேளாண்மைப் பொறியியல் துறையிடமிருந்து மானியத் தொகையை பெற்ற பின்னர், விவசாயிகள் அத்தொகையை 2 நாட்களுக்குள் முகவர் / உற்பத்தியாளரின் வங்கிக் கணக்கில் செலுத்த வேண்டும்.**



மானியத் தொகை பெறுதல்




2 நாட்களுக்குள் செலுத்துதல்




முகவர்/உற்பத்தியாளரின் வங்கிக் கணக்கு



இணைய வங்கி (Net Banking)

---

- செலுத்தும் முறைகள்
  - ✓ வரைவோலை (DD)
  - ✓ இணைய வங்கி (Net Banking)



வரைவோலை (DD)



இணைய வங்கி (Net Banking)

- தொகையை முகவர்/ உற்பத்தியாளருக்கு செலுத்தலாம்.






## 17

சம்பந்தப்பட்ட விவசாயிடமிருந்து **மானியத் தொகையை பெற்றுக் கொண்டதற்கான** விவரங்கள் முகவர்/உற்பத்தியாளரால் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும்.



விவசாயியிடமிருந்து மானியத் தொகை பெறுதல்




இணையதளத்தில் பதிவேற்றம்



பதிவேற்றம் வெற்றிகரமாக முடிந்தது

## 18

விவசாயிடமிருந்து மானியத் தொகை பெற்ற பின்னர், **3 நாட்களுக்குள்** முகவர்/ உற்பத்தியாளர் ஒதுக்கீடு செய்யப்பட்ட வேளாண் இயந்திரம் / கருவியை விவசாயியின் நிலத்திற்கு எடுத்துச் சென்று நேரடியாக வழங்க வேண்டும்.




3 நாட்களுக்குள்



வேளாண் இயந்திரம் / கருவியை விவசாயியின் நிலத்திற்கு கொண்டு செல்வது



நேரடியாக வழங்குதல்

குறிப்பு: மானியத் தொகை பெறுதல் மற்றும் வழங்குதல் குறித்த அனைத்து நடவடிக்கைகளும் காலக்கெடு உட்பட்டு மேற்கொள்ளப்பட வேண்டும்.

# 19 வேளாண் இயந்திரங்கள் / கருவிகளின் மறுஆய்வு

விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்ட வேளாண் இயந்திரம் அல்லது கருவிகளை வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ள உதவிப் பொறியாளர் (வே.பொ.) / இளநிலைப் பொறியாளர் (வே.பொ.) / உதவி செயற்பொறியாளர் (வே.பொ.) ஆகியோரால் விவசாயியின் நிலத்திற்கு **நேரடியாக சென்று மறுஆய்வு செய்யப்படும்.**




**விவசாயியின் நிலத்திற்கு நேரடியாக சென்று மறுஆய்வு செய்யப்படும்.**

## 20

### சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு

### 20% கூடுதல் மானியம் (Top-up Subsidy) – SC/ST

வேளாண் இயந்திரங்கள் / கருவிகளை வழங்குவதற்கு, ஆதிதிராவிட்ர் / பழங்குடியினர் (SC/ST) பிரிவைச் சேர்ந்த சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 20% கூடுதல் மானியம் (Top-up Subsidy) வழங்கப்படும்.




முகவர் / உற்பத்தியாளர் வங்கிக் கணக்கில் செலுத்துதல்

மேற்கண்ட கூடுதல் மானியத் தொகையானது முகவர்/ உற்பத்தியாளர் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்.

## 21

### சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு

### 10% கூடுதல் மானியம் (Top-up Subsidy) – பொது பிரிவு (SC/ST அல்லாதவர்கள்)

நெல்நாற்று நடவு செய்யும் இயந்திரம், விசைக்களையெடுக்கும் கருவி மற்றும் தட்டை வெட்டும் கருவி ஆகியவற்றை வழங்குவதற்கு, பொதுப் பிரிவைச் சேர்ந்த (ஆதிதிராவிடர் / பழங்குடியினர் பிரிவைத் சாராத) சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 10% கூடுதல் மானியம் (Top-up Subsidy) வழங்கப்படும்.




முகவர் / உற்பத்தியாளர் வங்கிக் கணக்கில் செலுத்துதல்

மேற்கண்ட கூடுதல் மானியத் தொகையானது முகவர்/ உற்பத்தியாளர் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்.

குறிப்பு: மேற்கண்ட கூடுதல் மானியம் (Top-up Subsidy) விவசாயிகளின் தகுதித் தகவல்கள் மற்றும் திட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு வழங்கப்படும்.



# விவசாய பெருமக்களின் கவனத்திற்கு



**1**

GOVERNMENT SUBSIDY

ஒன்றிய அரசின் வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்க திட்ட வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி **அரசு மானியம் வழங்கப்படும்.**

**2**

## வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளுக்கு:



| | |
|---|---|
| ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கு | - 50 விழுக்காடு |
| மற்றவர்களுக்கு | - 40 விழுக்காடு |

அல்லது அரசால் நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச மானியத் தொகை, இதில் எது குறைவோ அந்த தொகை மானியமாக வழங்ககப்படும்.

**3**

வேளாண்மைப் பொறியியல் துறையின் இணையதளத்தின் மூலம் வேளாண் இயந்திரங்கள் அல்லது கருவிகளை வாங்காமல் முகவரிடமிருந்து நேரடியாக வாங்கிடும் பட்சத்தில் அவருக்கு **அரசு மானியம் அளித்திட இயலாது.**





# விவசாய பெருமக்களின் கவனத்திற்கு



**4**

விவசாயி மானிய விலையில் வேளாண் இயந்திரங்கள் அல்லது கருவிகளை வாங்கிய பின்னர் **அடுத்த 10 ஆண்டுகளுக்கு** பின்னர்தான் அதே வேளாண் இயந்திரங்கள் அல்லது கருவிகளை மறுபடியும் மானிய விலையில் வாங்கிட இயலும்.

ஆனால், **ரூ.5,000** வரை அதிகபட்ச மானியம் வழங்கப்படும் வேளாண் கருவிகளுக்கு இந்த நிபந்தனை பொருந்தாது.




**5**

மேலும், ஒரு நிதியாண்டில் விவசாயி தனக்கு தேவைப்படும் ஏதாவது **ஒரு வேளாண் இயந்திரம்** மற்றும் **ஒரு வேளாண் கருவியி**னை மட்டுமே மானிய விலையில் வாங்கிட இயலும்.




**6**

நடப்பு நிதியாண்டில் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் அடுத்த நிதியாண்டிற்கு ஏற்றுக்கொள்ளப்படாது.

**ஒவ்வொரு வருடமும் மார்ச் 31 ஆம் தேதி அன்று** நிலுவையிலுள்ள அனைத்து விண்ணப்பங்களும் இரத்தாகிவிடும்.



# வேளாண் இயந்திரமயமாக்கும் திட்டம்

வேளாண் இயந்திரமயமாக்கும் திட்டத்தில், கீழ்க்கண்ட வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளுக்கு மானியம் வழங்கப்படும்.

1. டிராக்டர்
2. பவர் டில்லர்
3. இதர வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள்

அ. நிலம் தயார் செய்யத் தேவையான கருவிகள்

ஆ. நடவு செய்யத் தேவையான கருவிகள்

இ. பயிர் பாதுகாப்பு மேற்கொள்ள உதவும் கருவிகள்

ஈ. பயிர் அறுவடைக்கான இயந்திரங்கள்

உ. பயிர் அறுவடைக்குப் பின்செய்நேர்த்தி மற்றும் மதிப்புக்கூட்டும் இயந்திரங்கள்

ஊ. சிறப்புக் கருவிகள்

# 1. டிராக்டர் (Tractor)



# 1. டிராக்டர் (Tractor)

| வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர் | ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கான மானிய விவரம் | | இதர விவசாயிகளுக்கான மானிய விவரம் | |
|---|---|---|---|---|
| | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் |
| டிராக்டர் 2 வீல் டிரைவ் (20 PTO குதிரைத்திறன் வரை) | ரூ.2.00 இலட்சம் | 50% | ரூ.1.60 இலட்சம் | 40% |
| டிராக்டர் 4 வீல் டிரைவ் (20 PTO குதிரைத்திறன் வரை) | ரூ.2.45 இலட்சம் | 50% | ரூ.1.96 இலட்சம் | 40% |
| டிராக்டர் 2 வீல் டிரைவ் (20 குதிரைத்திறனுக்கு மேல் 40 PTO குதிரைத்திறன் வரை) | ரூ.3.00 இலட்சம் | 50% | ரூ.2.40 இலட்சம் | 40% |
| டிராக்டர் 4 வீல் டிரைவ் (20 குதிரைத்திறனுக்கு மேல் 40 PTO குதிரைத்திறன் வரை) | ரூ.3.60 இலட்சம் | 50% | ரூ.2.88 இலட்சம் | 40% |
| டிராக்டர் 2 வீல் டிரைவ் (40 குதிரைத்திறனுக்கு மேல் 50 PTO குதிரைத்திறன் வரை) | ரூ.4.50 இலட்சம் | 50% | ரூ.3.60 இலட்சம் | 40% |
| டிராக்டர் 4 வீல் டிரைவ் (40 குதிரைத்திறனுக்கு மேல் 50 PTO குதிரைத்திறன் வரை) | ரூ.5.45 இலட்சம் | 50% | ரூ.4.36 இலட்சம் | 40% |
| டிராக்டர் 2 வீல் டிரைவ் (50 PTO குதிரைத்திறனுக்கு மேல்) | ரூ.6.00 இலட்சம் | 50% | ரூ.4.80 இலட்சம் | 40% |
| டிராக்டர் 4 வீல் டிரைவ் (50 PTO குதிரைத்திறனுக்கு மேல்) | ரூ.6.50 இலட்சம் | 50% | ரூ.5.20 இலட்சம் | 40% |

# 2. பவர் டில்லர்

| வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர் | ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கான மானிய விவரம் | | இதர விவசாயிகளுக்கான மானிய விவரம் | |
|---|---|---|---|---|
| | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் |
| பவர் டில்லர் (8 குதிரைத்திறன் முதல் 11 குதிரைத்திறன் வரை) | ரூ. 1.00 இலட்சம் | 50% | ரூ. 0.80 இலட்சம் | 40% |
| பவர் டில்லர் (11 குதிரைத்திறனுக்கு மேல்) | ரூ.1.20 இலட்சம் | 50% | ரூ. 1.00 இலட்சம் | 40% |



# அ. நிலம் தயார் செய்யத் தேவையான கருவிகள்

## முதல் நிலை கருவிகள் (PRIMARY TILLAGE IMPLEMENTS)

1. கொத்துக் கலப்பை (Cultivator)
2. சுழற் கலப்பை (Rotavator)
3. லேசர் உதவியுடன் நிலம் சமன் செய்யும் கருவி (Laser Leveller)
4. ரோட்டோ பட்லர் (Roto Puddler)
5. வரப்பு செதுக்கி சேறு பூசும் கருவி (PTO Operated Bund former)

# 1. கொத்துக் கலப்பை (Cultivator)

| வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர் | ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கான மானிய விவரம் | | இதர விவசாயிகளுக்கான மானிய விவரம் | |
|---|---|---|---|---|
| | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் |
| 20 குதிரைத்திறனுக்கும் குறைவான திறன் கொண்ட டிராக்டர் / பவர் டில்லரால் இயக்கப்படும் கொத்துக் கலப்பை | ரூ. 20,000 | 50% | ரூ. 16,000 | 40% |
| 20 முதல் 35 குதிரைத்திறன் வரை திறன் கொண்ட டிராக்டர் மூலம் இயக்கப்படும் கொத்துக் கலப்பை | | | | |
| கொத்துக் கலப்பை | ரூ. 18,000 | 50% | ரூ. 14,400 | 40% |
| 35 குதிரைத்திறனுக்கு மேல் திறன் கொண்ட டிராக்டர் மூலம் இயக்கப்படும் கொத்துக் கலப்பை | | | | |
| கொத்துக்கலப்பை (9 முதல் 13 கலப்பைகள்) (Cultivator) | ரூ.25,000 | 50% | ரூ. 20,000 | 40% |



# 2. சுழற் கலப்பை (Rotavator)

| வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர் | ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கான மானிய விவரம் | | இதர விவசாயிகளுக்கான மானிய விவரம் | |
|---|---|---|---|---|
| | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் |
| சுழற் கலப்பை – 4 அடி வரை (upto 4 ft Rotavator) | ரூ.45,000 | 50% | ரூ.36,000 | 40% |
| சுழற் கலப்பை – 5 அடி வரை (upto 5 ft Rotavator) | ரூ.46,000 | 50% | ரூ.36,800 | 40% |
| சுழற் கலப்பை – 6 அடி (6 ft Rotavator) | ரூ.60,000 | 50% | ரூ. 48,000 | 40% |
| சுழற் கலப்பை – 7 அடி (7 ft Rotavator) | ரூ. 70,000 | 50% | ரூ. 56,000 | 40% |



# 3. லேசர் நிலம் சமன் செய்யும் கருவி (Laser Leveller)

| வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர் | ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கான மானிய விவரம் | | இதர விவசாயிகளுக்கான மானிய விவரம் | |
|---|---|---|---|---|
| | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் |
| லேசர் நிலம் சமன் செய்யும் கருவி (Laser Leveller) - 6 அடி | ரூ. 1.35 இலட்சம் | 50% | ரூ. 1.08 இலட்சம் | 40% |



# 4. ரோட்டோ பட்லர் (Roto Puddler)

| வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர் | ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கான மானிய விவரம் | | இதர விவசாயிகளுக்கான மானிய விவரம் | |
|---|---|---|---|---|
| | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் |
| ரோட்டோ பட்லர் (Roto Puddler) – 10 அடி | ரூ. 1.00 இலட்சம் | 50% | ரூ.0.80 இலட்சம் | 40% |



# 5. வரப்பு செதுக்கி சேறு பூசும் கருவி (PTO Operated Bund Former)

| வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர் | ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கான மானிய விவரம் | | இதர விவசாயிகளுக்கான மானிய விவரம் | |
|---|---|---|---|---|
| | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் |
| வரப்பு செதுக்கி சேறு பூசும் கருவி | ரூ. 1.50 இலட்சம் | 50% | ரூ. 1.20 இலட்சம் | 40% |



## ஆ. நடவு செய்யத் தேவையான கருவிகள்

### 1. தானியங்கி நெல் நாற்று நடவு செய்யும் இயந்திரம் (Self Propelled Paddy Transplanter)

| வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர் | ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கான மானிய விவரம் | | இதர விவசாயிகளுக்கான மானிய விவரம் | |
|---|---|---|---|---|
| | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் |
| 4 வரிசை நெல் நாற்று நடவு செய்யும் இயந்திரம் | ரூ. 1.70 இலட்சம் | 50% | ரூ. 1.36 இலட்சம் | 40% |
| 4 வரிசைக்கு மேல் 8 வரிசை வரை (அமர்ந்து இயக்கக்கூடியது உட்பட) | ரூ.6.00 இலட்சம் | 50% | ரூ. 4.80 இலட்சம் | 40% |



4 வரிசை நெல் நடவு இயந்திரம்



6 வரிசை நெல் நடவு இயந்திரம்

# 2. விதையுடன் உரமிடும் கருவி (Tractor Operated Seed cum Fertilizer Drill)

| வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர் | ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கான மானிய விவரம் | | இதர விவசாயிகளுக்கான மானிய விவரம் | |
|---|---|---|---|---|
| | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் |
| விதையுடன் உரமிடும் கருவி | ரூ.26,000 | 50% | ரூ.20,800 | 40% |



# இ. பயிர் பாதுகாப்பு மேற்கொள்ள உதவும் கருவிகள்

## 1.விசை களையெடுக்கும் கருவி

| வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர் | ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கான மானிய விவரம் | | இதர விவசாயிகளுக்கான மானிய விவரம் | |
|---|---|---|---|---|
| | அதிக பட்ச மானியம் | மானிய சதவீதம் | அதிக பட்ச மானியம் | மானிய சதவீதம் |
| 2 குதிரைத்திறன் முதல் 5 குதிரைத்திறனுக்குக் கீழ் உள்ள என்ஜினால் இயங்கக்கூடியது | ரூ. 40,000 | 50% | ரூ. 32,000 | 40% |
| 5 குதிரைத்திறன் முதல் 7.5 குதிரைத்திறனுக்குக் கீழ் உள்ள என்ஜினால் இயங்கக்கூடியது | ரூ. 75,000 | 50% | ரூ. 60,000 | 40% |
| 7.5 குதிரைத்திறன் முதல் அதற்கு மேல் உள்ள குதிரைத்திறனுக்குக் கீழ் உள்ள என்ஜினால் இயங்கக்கூடியது | ரூ. 85,000 | 50% | ரூ. 68,000 | 40% |



# 2. தெளிப்பான் (Sprayer)

| வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர் | ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கான மானிய விவரம் | | இதர விவசாயிகளுக்கான மானிய விவரம் | |
|---|---|---|---|---|
| | அதிக பட்ச மானியம் | மானிய சதவீதம் | அதிக பட்ச மானியம் | மானிய சதவீதம் |
| 8 முதல் 12 லிட்டர் வரை கொள்ளளவு) (0.75 hp-க்குக் கீழ் உள்ள எஞ்சினால் இயங்கக்கூடியது) | ரூ. 3,000 | 50% | ரூ. 2400 | 40% |
| 12 லிட்டருக்கு மேல் 16 லிட்டர் வரை கொள்ளளவு) (0.75 hp முதல் 1 hp வரை உள்ள எஞ்சினால் இயங்கக்கூடியது) | ரூ. 4,000 | 50% | ரூ. 3,200 | 40% |
| 16 லிட்டருக்கு மேல் கொள்ளளவு) (1 hp-க்கு மேல் உள்ள எஞ்சினால் இயங்கக்கூடியது) | ரூ. 10,000 | 50% | ரூ. 8,000 | 40% |



# 3. கிசான் ட்ரோன்கள் (Drone)

| வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர் | ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கான மானிய விவரம் | | இதர விவசாயிகளுக்கான மானிய விவரம் | |
|---|---|---|---|---|
| | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் |
| கிசான் ட்ரோன்கள் | ரூ. 5.00 இலட்சம் | 50% | ரூ. 4.00 இலட்சம் | 40% |



# ஈ. பயிர் அறுவடைக்கான கருவிகள்

## 1.கதிர் அறுக்கும் கருவி (Crop Reaper cum binder)

| வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர் | ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கான மானிய விவரம் | | இதர விவசாயிகளுக்கான மானிய விவரம் | |
|---|---|---|---|---|
| | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் |
| கதிர் அறுக்கும் கருவி (Crop Reaper cum binder) | ரூ. 2.75 இலட்சம் | 50% | ரூ.2.20 இலட்சம் | 40% |



# 2. நெல் அறுவடை இயந்திரம்



# 2. நெல் அறுவடை இயந்திரம்

| வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர் | ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கான மானிய விவரம் | | இதர விவசாயிகளுக்கான மானிய விவரம் | |
|---|---|---|---|---|
| | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் |
| தானியங்கி நெல் அறுவடை இயந்திரம் | ரூ. 9.60 இலட்சம் | 50% | ரூ. 7.68 இலட்சம் | 40% |
| டிராக்டர் மூலம் இயக்கப்படும் நெல் அறுவடை இயந்திரம் (டிராக்டர் இல்லாமல்) | ரூ. 3.60 இலட்சம் | 50% | ரூ. 2.80 இலட்சம் | 40% |
| டிராக்டர் மூலம் இயக்கப்படும் நெல் அறுவடை இயந்திரம் (டிராக்டர் உடன்) | ரூ. 8.70 இலட்சம் | 50% | ரூ. 6.96 இலட்சம் | 40% |
| நெல் அறுவடை இயந்திரம் (டிராக் -6 அடிக்கு மேல் உள்ள கட்டர் பார் ) | ரூ. 12.50 இலட்சம் | 50% | ரூ. 10.00 இலட்சம் | 40% |

# 3. பல்வகைப் பயிர் கதிரடிக்கும் கருவி (Multi Crop Thresher)

| வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர் | ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கான மானிய விவரம் | | இதர விவசாயிகளுக்கான மானிய விவரம் | |
|---|---|---|---|---|
| | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் |
| மணிக்கு 4 டன் வரை கதிரடிக்கும் திறன் | ரூ. 1.25 இலட்சம் | 50% | ரூ. 1.00 இலட்சம் | 40% |
| மணிக்கு 4 டன்னுக்கு மேல் வரை கதிரடிக்கும் திறன் | ரூ. 2.25 இலட்சம் | 50% | ரூ. 1.80 இலட்சம் | 40% |



# உ. பயிர் அறுவடைக்குப் பின்செய்நேர்த்தி கருவிகள்

## 1. வைக்கோல் கட்டுக் கட்டும் கருவி (Baler)

| வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர் | ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கான மானிய விவரம் | | இதர விவசாயிகளுக்கான மானிய விவரம் | |
|---|---|---|---|---|
| | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் |
| வைக்கோல் கட்டு கட்டும் இயந்திரம் – (உருளை வடிவம்) (கட்டுக்கு 16 கிலோவுக்கு மேல் முதல் 40 கிலோ வரை) (Round Baler) | ரூ. 2.395 இலட்சம் | 50% | ரூ. 1.916 இலட்சம் | 40% |



# 2. புதர் அகற்றும் கருவி (Brush Cutter)

| வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர் | ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கான மானிய விவரம் | | இதர விவசாயிகளுக்கான மானிய விவரம் | |
|---|---|---|---|---|
| | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் |
| புதர் அகற்றும் கருவி | ரூ.25,000 | 50% | ரூ.20,000 | 40% |



# 3. தென்னை ஓலை துகளாக்கும் கருவி (Coconut Frond Chopper)

| வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர் | ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கான மானிய விவரம் | | இதர விவசாயிகளுக்கான மானிய விவரம் | |
|---|---|---|---|---|
| | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் |
| தென்னை ஓலை துகளாக்கும் கருவி | ரூ. 1.50 இலட்சம் | 50% | ரூ. 1.20 இலட்சம் | 40% |



# 4. கரும்புச் சோகை துகளாக்கும் கருவி
# (Sugarcane Trash Cutter)

| வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர் | ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கான மானிய விவரம் | | இதர விவசாயிகளுக்கான மானிய விவரம் | |
|---|---|---|---|---|
| | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் |
| கரும்புச் சோகை துகளாக்கும் கருவி | ரூ. 1.38 இலட்சம் | 50% | ரூ. 1.104 இலட்சம் | 40% |



# 5. தட்டை வெட்டும் கருவி (Chaff Cutter)

| வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர் | ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கான மானிய விவரம் | | இதர விவசாயிகளுக்கான மானிய விவரம் | |
|---|---|---|---|---|
| | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் |
| தட்டை வெட்டும் கருவி (Chaff Cutter) (3 குதிரைத்திறனுக்கு கீழ் உள்ள என்ஜின் / மின் மோட்டாரினால் இயங்கக் கூடியது) | ரூ.25,000 | 50% | ரூ.20,000 | 40% |



# சிறிய எண்ணெய் பிழியும் இயந்திரம் (Mini Oil Mill / Oil Expeller)

| வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர் | ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கான மானிய விவரம் | | இதர விவசாயிகளுக்கான மானிய விவரம் | |
|---|---|---|---|---|
| | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் |
| சிறிய எண்ணெய் பிழியும் இயந்திரம் | ரூ. 3.00 இலட்சம் | 50% | ரூ. 2.40 இலட்சம் | 40% |




# நடமாடும் நெல் உலர்த்தும் இயந்திரம் (Paddy mobile dryer)

| வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர் | ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கான மானிய விவரம் | | இதர விவசாயிகளுக்கான மானிய விவரம் | |
|---|---|---|---|---|
| | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் |
| நடமாடும் நெல் உலர்த்தும் இயந்திரம் | ரூ. 10.80 இலட்சம் | 50% | ரூ. 8.64 இலட்சம் | 40% |




# மின்சார பம்பு செட்டுகளுக்கான தொலைவிலிருந்து இயக்கும் கட்டுப்பாட்டுக் கருவி (Remote motor operators for Electric Pumpsets)

| வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர் | ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கான மானிய விவரம் | | இதர விவசாயிகளுக்கான மானிய விவரம் | |
|---|---|---|---|---|
| | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் |
| மின்சார பம்பு கட்டுப்பாட்டுக் கருவி | ரூ.7,000 | 50% | ரூ.5,000 | 40% |



# சூரிய சக்தியால் இயங்கும் விளக்குப் பொறி (Eco Friendly Light Trap)

| வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர் | ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கான மானிய விவரம் | | இதர விவசாயிகளுக்கான மானிய விவரம் | |
|---|---|---|---|---|
| | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் |
| சூரிய சக்தியால் இயங்கும் விளக்குப் பொறி | ரூ.2,000 | 50% | ரூ.1,600 | 40% |



# நவீன இயந்திரங்கள் மற்றும் கருவிகள்

## 1. மோட்டார் மூலம் இயங்கும் எளிதில் நகர்த்திச் செல்லக்கூடிய தானியம் சேகரிக்கும் இயந்திரம் (Motorized Portable Grain Loader)

| வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர் | ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கான மானிய விவரம் | | இதர விவசாயிகளுக்கான மானிய விவரம் | |
|---|---|---|---|---|
| | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் |
| மோட்டார் மூலம் இயங்கும் எளிதில் நகர்த்திச் செல்லக்கூடிய தானியம் சேகரிக்கும் இயந்திரம் | ரூ.12,000 | 50% | ரூ. 9,600 | 40% |



- மோட்டார் குதிரைத்திறன் : 0.25 hp
- திருகு போன்ற சுழலும் பாகத்தின் (Screw Auger) நீளம் : 5 அடி
- தானியம் ஏற்றும் திறன் : 1500 கிலோ ஒரு மணி நேரத்திற்கு
- மொத்த எடை : 18 கிலோ

# 2. எளிதில் நகர்த்தி செல்லக்கூடிய கால்நடை கொட்டகை (Portable cattle shed)

| வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர் | ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கான மானிய விவரம் | | இதர விவசாயிகளுக்கான மானிய விவரம் | |
|---|---|---|---|---|
| | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் |
| எளிதில் நகர்த்தி செல்லக்கூடிய கால்நடை கொட்டகை | ரூ.20,000 | 50% | ரூ.16,000 | 40% |




- அளவு – 14.5 அடி X 8 அடி
- மொத்த பரப்பு – 116 சதுர அடி
- 4 மாடுகள் அல்லது 12 ஆடுகள் கட்டும் இடவசதி கொண்டது
- கால்நடை தீவனத் தொட்டியின் எண்கள் : 2
- கால்நடை தீவன தொட்டியின் அளவு : 900 x 300 மிமீ
- கொட்டகையின் எடை : 150 கிலோ

# 3. எஞ்சினால் இயக்கக்கூடிய கரும்பு கட்டு ஏற்றும் இயந்திரம்
# (Engine Operated Sugarcane Bunch Elevator)

| வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர் | ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கான மானிய விவரம் | | இதர விவசாயிகளுக்கான மானிய விவரம் | |
|---|---|---|---|---|
| | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் |
| எஞ்சினால் இயக்கக்கூடிய கரும்பு கட்டு ஏற்றும் இயந்திரம் | ரூ.1,25,000 | 50% | ரூ.1,00,000 | 40% |




- சாய்வான ஏணி போன்ற செயின் கன்வேயர் மூலம் கரும்பு கட்டுகள் ஏற்றப்படுகிறது.
- 6 hp பெட்ரோல் எஞ்சினால் இயக்கப்படுகிறது.
- ஏற்றும் திறன் : ஒரு மணிக்கு 1.5 டன் வரை.
- உயரம் : 3.6 மீ
- எளிதில் வயல்களுக்கு கொண்டு செல்லுவதற்கு சக்கரங்கள் பொருத்தப்பட்டுள்ளது.

# 4. டிராக்டரால் இயங்கக்கூடிய தானியம் சேகரிக்கும் இயந்திரம்
# (Tractor PTO Operated flexible screw grain loader)

| வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர் | ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கான மானிய விவரம் | | இதர விவசாயிகளுக்கான மானிய விவரம் | |
|---|---|---|---|---|
| | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் |
| டிராக்டரால் இயங்கக்கூடிய தானியம் சேகரிக்கும் இயந்திரம் | ரூ.37,500 | 50% | ரூ.30,000 | 40% |

- தேவையான டிராக்டர் திறன் : 35 hp
- PTO சக்தி 'V' பெல்ட் மற்றும் புல்லி அமைப்பின் மூலம் ஸ்க்ரூ ஆகர் அமைப்பிற்கு அனுப்பப்படுகிறது,
- சக்ஷன் குழாய் 10 செ.மீ விட்டம் கொண்ட நெகிழ்வான குழாயாகும்.
- இதன் முன்பகுதியில் 16 செ.மீ நீளமுடைய ஸ்க்ரூ ஆகர் அமைப்பு பொருத்தப்பட்டிருப்பதால் தானியங்கள் சேகரித்து குழாய்க்குள் அனுப்பப்படுகிறது.
- மொத்த நெகிழ்வான குழாயின் நீளம் 10 மீட்டர். அதற்குள் ஸ்க்ரூ ஆகர் அமைப்பு பொருத்தப்பட்டுள்ளது.
- பிரேம் உயரம் 12.8 அடியாக இருப்பதால் டிராக்டர் டிரெய்லருக்குள் தானியங்களை அனுப்புவதற்கு உதவுகிறது.



## 5. மோட்டார் மூலம் இயங்கக்கூடிய தானியங்களை சாக்குப்பைகளில் நிரப்பும் இயந்திரம் (Motorized portable grain bag loader)

| வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர் | ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கான மானிய விவரம் | | இதர விவசாயிகளுக்கான மானிய விவரம் | |
|---|---|---|---|---|
| | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் | அதிகபட்ச மானியம் | மானிய சதவீதம் |
| மோட்டார் மூலம் இயங்கக்கூடிய தானியங்களை சாக்குப்பைகளில் நிரப்பும் இயந்திரம் | ரூ.34,000 | 50% | ரூ. 27,200 | 40% |




- செமி – ஆட்டோமேட்டிக் (Semi-Automatic) வகையானது
- சக்ஷன் குழாயின் விட்டம் : 4 இன்ச்
- இயந்திரம் லேசான எஃகினால் செய்யப்பட்டுள்ளது.
- ஒரு முனை மின்மோட்டாரால் இயக்கப்படுகிறது.
- சக்கரம் : 2 எண்கள்
- எடை : 60 கிலோ
- இயந்திரத்தின் உயரம் : 154 செ.மீ

# சிறு, குறு விவசாயிகளுக்கான கூடுதல் மானியம்

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவினைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு** வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் மானியத்தில் வாங்க ஏற்கனவே நடைமுறையில் உள்ள **50 சதவீத** மானியத்துடன் **கூடுதலாக 20 சதவீத மானியம்** மாநில நிதியிலிருந்து சேர்த்து **70 சதவீதம் மானியம்** வழங்கப்படும்.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவினைச் சாராத இதர பிரிவினைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு** விசைக்களையெடுப்பான்கள், நெல்நாற்று நடவு செய்யும் இயந்திரம் மற்றும் தட்டை வெட்டும் கருவி ஆகியவற்றை வாங்க ஏற்கனவே நடைமுறையில் உள்ள **50 சதவீத** மானியத்துடன் **கூடுதலாக 10 சதவீத மானியம்** மாநில நிதியிலிருந்து சேர்த்து **60 சதவீதம் மானியம்** வழங்கப்படும்.

# வட்டார அளவிலான வேளாண் கருவிகள் வாடகைக்கு வழங்கும் மையங்கள்

- நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய உயர்திறன் கொண்ட டிராக்டர்கள், அறுவடை இயந்திரங்கள், டிரோன்கள் உள்ளிட்ட உயர்மதிப்புள்ள வேளாண் இயந்திரங்களை விவசாயிகள் எளிதில் வாடகைக்கு பெற்று பயன்படுத்தும் வகையில் கிராமப்புர இளைஞர்கள், தொழில் முனைவோர், விவசாயிகள், மகளிர் சுய உதவி குழுக்கள் (DAY-NRLM), உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், ஊராட்சிகள் மற்றும் கூட்டுறவு அமைப்புகள் மூலம் வட்டார அளவிலான வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைக்க மானிய உதவி வழங்கப்படும்.

- ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும் ஒவ்வொரு வட்டார அளவிலான வேளாண் இயந்திர வாடகை மையத்திற்கும் 40 சதவீத மானியமாக அதிகபட்சம் ரூ.10 இலட்சம் மானியம் வழங்கப்படும்.

# வேளாண் கருவிகள் வாடகைக்கு வழங்கும் மையம்



# கிராம அளவிலான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகைக்கு வழங்கும் மையம்

- விவசாயிகள் தங்களுக்குத் தேவையான வேளாண் இயந்திரங்கள், கருவிகள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்து தெளிக்கும் டிரோன்கள் போன்ற நவீன உபகரணங்களை எளிதில் வாடகை அடிப்படையில் பெற்று பயன்படுத்தும் வகையில், கிராம அளவிலான வேளாண் இயந்திர வாடகை மையங்கள் மகளிர் சுய உதவி குழுக்கள் (DAY-NRLM), உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், ஊராட்சிகள் மற்றும் கூட்டுறவு அமைப்புகள் பயன்பெறும் வகையில் அமைக்கப்படவுள்ளது.
- இத்திட்டத்தின்கீழ், ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும் ஒவ்வொரு மையத்திற்கும் 80 சதவீத மானியமாக அதிகபட்சம் ரூ.8 இலட்சம் வழங்கப்படவுள்ளது.
- நடப்பாண்டில் கிராம அளவிலான வேளாண் இயந்திர வாடகை மையங்கள் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் மானியத்தில் அமைக்கப்படவுள்ளது.

# வேளாண் விளைபொருட்களை மதிப்புக்கூட்டும் சேவை மையம்

- "சர்வதேச மகளிர் விவசாயிகள் ஆண்டு – 2026"-ஐ முன்னிட்டு, வேளாண்மையில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்கும் நோக்கில், "வேளாண் விளைபொருட்களை மதிப்புக்கூட்டும் சேவை மையங்கள்" பிரத்தியேகமாக மகளிர் சுய உதவிக் குழுக்கள் (DAY-NRLM) மூலம் அமைக்கப்பட உள்ளது.



# வேளாண் விளைபொருட்களை மதிப்புக்கூட்டும் சேவை மையம்

ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும் ஒவ்வொரு மையத்திற்கும்

**80 சதவீத மானியமாக** அதிகபட்சம் **ரூ.8** இலட்சம் வழங்கப்படவுள்ளது.



# மாநில வேளாண் இயந்திரங்கள் தகவல் மையம்



# மாநில வேளாண் இயந்திரங்கள் தகவல் மையம்

- விவசாயிகளிடையே வேளாண் இயந்திரமயமாக்கலைப் பிரபலப்படுத்தும் நோக்கத்துடன் அனைத்து வேளாண் பொறியியல் தொழில்நுட்பங்களை ஒருங்கிணைத்து தனித்துவம் வாய்ந்த "மாநில வேளாண் இயந்திரங்கள் தகவல் மையம்" சென்னை, அண்ணா சாலையில் நந்தனம் பகுதியில் அமைந்துள்ள வேளாண்மைப் பொறியியல் துறை, தலைமைப் பொறியாளர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ளது.

- தமிழ்நாட்டில் வேளாண் இயந்திரமயமாக்குதலை ஊக்குவிக்கவும், வேளாண் பணியாட்கள் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்வதற்கான தொழில்நுட்பத்தை பிரபலப்படுத்தவும், நவீன மற்றும் புதிய வேளாண் இயந்திரங்கள், மதிப்புக்கூட்டும் இயந்திரங்கள், நுண்ணீர்ப் பாசனக்கருவிகள் மற்றும் பம்புசெட்டுகள் ஆகியவற்றிற்கு காட்சியரங்கங்கள் ஒளி மற்றும் ஒலி அமைப்புகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இம்மையத்தில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் விவசாயிகளால் பயன்படுத்தப்பட்ட பழமை வாய்ந்த விவசாயக்கருவிகளின் தொகுப்பு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

# மாநில வேளாண் இயந்திரங்கள் தகவல் மையம்

- இதைத்தவிர **சூரியசக்தி பம்புசெட்டுகள், சூரிய கூடார உலர்த்திகள், சூரிய மின்வேலி அமைப்புகள் மற்றும் தானியங்கி நீர்ப்பாசன அமைப்புகள்** இம்மையத்தில் தத்ரூபமாக விவசாயிகளின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. இம்மையத்தினை விவசாயிகள், படித்த இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் **சனி, ஞாயிறு மற்றும் அரசு விடுமுறை நாட்கள் தவிர வருடம் முழுவதும் அரசு வேலை நாட்களில் கட்டணமின்றி நேரடியாகச் சென்று பார்த்து பயன் பெறலாம்.**

- வேளாண் இயந்திரங்கள், கருவிகள், **மதிப்புக் கூட்டும் இயந்திரங்கள், சூரிய கூடார உலர்த்திகள் மற்றும் சூரிய மின்வேலி** அமைப்புகள் ஆகியவற்றைப் பற்றிய **தொழில்நுட்ப விவரங்கள், மாடல், குதிரைத்திறன், இயந்திரத்தின் வகை மற்றும் மானிய விவரங்களை இம்மையத்தின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.**





# நன்றி

